# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2019.10.18

**ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் :10/ 2019**

பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**ஆரம்ப தர ஊழியர்களை முகாமைத்துவ உதவியாளர் தரம் III பதவியில் நியமித்தல்**

எழுதுநர் தரம் - III மற்றும் முகாமைத்துவ உதவியாளர் தரம் - III பதவிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் 1979.11.27, 1998.09.15, 2016.10.04 மற்றும் 2018.07.16 ஆம் திகதிய, முறையே 50, 742, 15/2016 மற்றும் 06/2018 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. 2018.08.01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் 06/2018 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கை அறிமுகஞ் செய்யப்பட்டதுடன் கணனிப் பயன்பாடுகள் உதவியாளர் (Computer Application Assistant), எழுதுநர் (Clerk), தட்டெழுத்தாளர் (Typist) மற்றும் சுருக்கெழுத்தாளர் (Stenographer) போன்ற பதவிகளை வகிப்பவர்கள் முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டனர். ஆரம்ப தர ஊழியர்களுக்கு முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) பிரிவுக்குரிய பதவியில் இணைந்துகொள்வதற்கான நடைமுறையை அவ்வாறே அமுல்படுத்துவதுடன் 50 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எழுதுநர் தரம் - III பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் 15/2016 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கை ஊடாக வெளியிடப்பட்டுள்ள முகாமைத்துவ உதவியாளர் தரம் - III தொடர்பான ஆட்சேர்ப்பு நடைமுறை என்பவற்றில் அப்பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு தேவையான தகைமைகளில் வேறுபாடு நிலவுகின்றது.

3. 15/2016 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையை இரத்துச்செய்து வெளியிடப்பட்ட 06/2018 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கைப் பிரகாரம், முகாமைத்துவ உதவியாளர் தரம் - III பதவியில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 30% இனை ஆரம்ப தர ஊழியர்களிலிருந்து நிரப்புவதற்காக ஒதுக்குதல் வேண்டும். மேலும், ஏற்புடைய தினமன்று ஆரம்ப, கனிஷ்ட தரங்களில் நிரந்தரப் பதவியொன்றில் குறைந்தது 05 வருட தொடர்ச்சியான, திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள ஊழியர்களை 06/2018 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையில் விதித்துரைக்கப்பட்டுள்ள ஏனைய கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்திருப்பின் அவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புப் பிரிவின் கீழ் முகாமைத்துவ உதவியாளர் தரம் - III பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

4. 50 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஆரம்ப தர நிரந்தரப் பதவியொன்றில் குறைந்தது 03 வருட கால திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஆரம்ப தர ஊழியர்களுக்கு அச்சுற்றறிக்கையில் விதித்துரைக்கப்பட்டுள்ள ஏனைய தகைமைகளை பூர்த்தி செய்திருப்பின் எழுதுநர் தரம் - III பதவிக்கு விண்ணப்பிக்க முடியுமாக இருந்தது.

5. எழுதுநர் தரம் - III பதவி மற்றும் முகாமைத்துவ உதவியாளர் தரம் - III ஆகிய பதவிகளுக்கான தனித் தனியான ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் விதித்துரைக்கப்பட்டுள்ள ஏனைய தகைமைகள் மற்றும் சேவை அனுபவம் என்பன சம்பந்தமான வேறு தேவைகள் தொடர்பில் கவனத்திற்கொண்ட **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, 2019 மே மாதம் 23 ஆம் திகதி நடைபெற்ற அதன் 1010 ஆவது கூட்டத்தின்போது முகாமைத்துவ உதவியாளர் தரம் - III பதவிக்காக ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆரம்ப தர ஊழியர்கள் அப்பதவிக்கு (U-PL பிரிவு) நியமிக்கப்படும் சந்தர்ப்பத்தில், எழுதுநர் தரம் - III பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்காக அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட சேவை அனுபவம் தொடர்பான தேவைப்பாட்டை கவனத்திற்கொண்டு அவ்வாறு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஆரம்ப தர ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.**

6. அதற்கமைய, 50 மற்றும் 742 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் 2015.01.01 ஆம் திகதி முதல் 2019.10.02 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் தகைமை பெற்றுள்ள ஆரம்ப தர ஊழியர்களிடமிருந்து முகாமைத்துவ உதவியாளர் தரம் - III பதவிக்கு விண்ணப்பங்களைக் கோருவதற்கு மேலே குறிப்பிடப்பட்ட ஆணைக்குழுக் கூட்டத்தின்போது அங்கீகாரம் வழங்கப்பட்டது. மேலும், மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய முகாமைத்துவ உதவியாளர் தரம் - III பதவிக்காக ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் **அடுத்த கிட்டிய இரண்டு ஆட்சேர்ப்புக்களுக்காக மாத்திரம்** இந்த ஊழியர்கள் தொடர்பாக கவனத்திற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

7. அந்த ஆட்சேர்ப்பு செயற்பாடுகளின் ஊடாக தெரிவு செய்யப்படாத அல்லது ஏதேனுமொரு காரணத்தின் அடிப்படையில் மேலே ஒவ்வொரு ஆட்சேர்ப்புச் செயற்பாடுகளின்போது ஒரு பிரிவினருக்கு அல்லது பூரண செயற்பாட்டில் பங்குபற்றாத ஆரம்ப தர சேவைப் பிரிவின் (U-PL பிரிவு) பதவியொன்றுக்கு 2016.02.03 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியர்கள், **2018.07.16 ஆம் திகதிய, 06/2018 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கைப் பிரகாரம் முகாமைத்துவ உதவியாளர் தரம் - III இற்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையைப் பெறுகின்றனர்.**

8. தங்களது உயர்கல்வி நிறுவகத்தில் பணியாற்றும் ஏற்புடைய ஊழியர்களுக்கு இது சம்பந்தமாக அறிவுறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவுடன் அறியத் தருகின்றேன்.

**ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா**

தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்.
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளர்கள்/சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கோப்பு இலக்கம் : UGC/HR/3/6/M/2019